## 15.1 : திசைகள்.

❖ நான்கு பிரதான திசைகள் தொடர்பான செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

I. நான்கு பிரதான திசைகளை அறிமுகம் செய்ய வழிப்படுத்துங்கள்.

- அதிகாலை மு.ப 9.00 மணிக்கு முன்பாக சூரியன் உதிக்கும் திசை யாது என பிள்ளையிடம் வினவுங்கள்.
- வீட்டிற்கு வெளியே அழைத்துச் சென்று சூரியன் உதிக்கும் திசையை நோக்கி நிற்குமாறு கூறுங்கள்.
- அத்திசை கிழக்குத் திசை என அறிமுகம் செய்யுங்கள்.
- சூரியன் உதிக்கும் திசை கிழக்குத் திசை என்பதை அறிவூட்டுங்கள்.
- அவர்களின் வலது கையை பக்கவாட்டில் தோளுக்கு நேராக நீட்டச் சொல்லுங்கள்.
- வலது கைப்பக்கம் தெற்குத் திசை என அறிமுகம் செய்யுங்கள்.
- அவ்வாறே இடது கைப்பக்கம் வடக்குத் திசை என அறிமுகம் செய்யுங்கள்.
- கிழக்குத் திசைக்கு நேர் எதிர்த் திசை, அதாவது பிள்ளையின் முதுகுப் பக்கம் மேற்குத் திசை என்பதை கூறுங்கள்.




- உ+ம் – வீட்டிலுள்ள நபர்கள் அல்லது பொருட்களை எடுத்துக் கொள்ளுங்கள். நபர்கள் எனின் நான்கு இடங்களிலும் நிறுத்துங்கள். பின் வினாக்களை கேளுங்கள்.

1). நடுவில் இருப்பவர் யார்?

2). அவருக்கு கிழக்குத் திசையில் இருப்பவர் யார்?

3). அவருக்கு வடக்குத் திசையில் இருப்பவர் யார்?

4). அவருக்கு தெற்குத் திசையில் இருப்பவர் யார்?

5). அவருக்கு மேற்குத் திசையில் இருப்பவர் யார்?

❖ இவ்வாறு பிரதான நான்கு திசைகளையும் பிள்ளைக்கு பரிச்சயமாகும் வரையில் நினைவூட்டுங்கள்.

II. காகிதத்தாள் ஒன்றில் வட்டம் ஒன்றை வரைந்து வெட்டிக் கொள்ளுங்கள்.

- வட்டத்தை இரண்டாக மடித்து கொள்ளுங்கள். இது வட்டத்தின் பாதி (அரை)
- அரை வட்டத்தை மீண்டும் இரண்டாக மடியுங்கள்.
- இது கால் வட்டமாகும்.



❖ இனி அவ்வட்டத்தை விரித்து கோடுகள் வரைந்து நான்கு திசைகளினதும் முதல் எழுத்தை எழுதுங்கள்.




III. கீழே தரப்பட்டுள்ள உருவத்தினை அவதானித்து விடை எழுத வழிப்படுத்துங்கள்.




1). பந்திற்கு வடக்குத் திசையில் இருப்பது யாது? ...............
2). பந்திற்கு தெற்குத் திசையில் இருப்பது யாது? .................
3). பந்திற்கு கிழக்குத் திசையில் இருப்பது யாது? .................
4). பந்திற்கு மேற்குத் திசையில் இருப்பது என்ன? ................
5). பாவைக்கு கிழக்குத் திசையில் இருப்பது யாது? ..............
6). மட்டைக்கு மேற்குத் திசையில் இருப்பது யாது? .............
7). காருக்கு தெற்குத் திசையில் இருப்பது யாது? ..................
8). சைக்களுக்கு வடக்குத் திசையில் இருப்பது யாது? ..........

IV. பிள்ளையின் கணித பயிற்சிக் கொப்பியில் பத்து சதுரங்கள் இருக்குமாறு ஒரு கட்டவலை ஒன்றை வரைந்து கொள்ள வழிப்படுத்துங்கள்.






- சிறு விதை / மூடி / பொத்தான் ஒன்றைக் பெற்றுக் கொள்ளுங்கள். கீழ் தரப்பட்டிருக்கும் கட்டளைகளுக்கேற்ப உரிய இடத்திற்கு நகர்த்திச் செல்வதை கவனமாக அவதானியுங்கள்.
- தவறுகள் விடும் பட்சத்தில் சரியான முறையில் வழிப்படுத்த உதவுங்கள்.

1). பொத்தானை 2 கட்டங்கள் கிழக்குத் திசையில் கொண்டு செல்லுங்கள்.
2). அங்கிருந்து 3 கட்டங்கள் வடக்குத் திசையில் கொண்டு செல்லுங்கள்.
3). பின் அங்கிருந்து 2 கட்டங்கள் மேற்குத் திசையில் கொண்டு செல்லுங்கள்.
4). அங்கிருந்து 3 கட்டங்கள் தெற்குத் திசையில் கொண்டுசெல்லுங்கள்.
5). இப் போது பொத்தான் தொடங்கிய இடத்தில் இருக்கின்றதா? .......................

❖ பாடநூல் பக்கங்கள் 54, 55, 56, 57 உரிய பயிற்சிகளைச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.